**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | | | |
|---|---|---|---|
| IN THE COURT OF : | THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGALPATTU. | | |
| Calendar | ... | | |
| Miscellaneous | ... | | |
| Preliminary Register | ... | | |
| Sessions | ... | **SC.No.153/2007** | |
| Deposition of witness for | ..... | Prosecution | L.W.9 |
| | ..... | Defence | P.W.6 |
| | .... | Court | |
| Name | : | திரு.மாரிமுத்து த/பெ.பெருமாள்சாமி | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 23.11.2021

முதல் விசாரணை:

நான் பெருங்குடியில் குடியிருக்கிறேன். நான் அரிசி கடை வைத்துள்ளேன். 2006ம் வருடம் இரண்டாவது மாதம் ஒரு நாள் நான் கடையில் இருந்தேன். என் தம்பி காயிலாங்கடை வைத்துள்ளார். காயிலாங்கடையில் 3 பேரை கொலை செய்து விட்டதாக சொன்னார்கள். நான் என் தம்பி கடைக்கு போனேன். நான் சும்மா வேடிக்கை பார்த்தேன். என் தம்பி கடைக்கு முன்னால் கொலை நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து மண்ணில் இருந்து ரத்தம் எடுத்தார்கள், சிறிய கற்களில் ரத்தம் இருந்தது, அதையும் எடுத்தார்கள். துரைப்பாக்கம் போலீஸ் எழுதினார்கள். என் தம்பி கடை என்பதால் என்னிடம் கையெழுத்து போட்டார்கள், நான் போட்டேன். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். மண், கல் எடுத்தது பற்றி அவற்றில் எழுதியுள்ளது. பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகியவை முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்):-**

நான் கையெழுத்து போட்ட பேப்பர்களில் என்ன எழுதியுள்ளது என தெரியாது என்றாலும், போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க கையெழுத்து போட்டேன் என்றாலும் சரிதான். நான் என்

தம்பி கடைக்கு அன்றைய தினம் போகவில்லை என்றாலும், என் தம்பி திருட்டு பொருள் வாங்குபவர் என்றாலும், அதனால் தான் போலீசார் சொன்னதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றாலும் சரியல்ல. நான், எனது தம்பி, நாகராஜ் ஆகியோர்களை காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல, சம்பவ இடத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டோம். என் முன்னிலையில் மண், கல் எடுக்கவில்லை என்றாலும், போலீசார் சொல்லி கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

**மறு விசாரணை:-**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | | | |
|---|---|---|---|
| IN THE COURT OF : | THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGALPATTU. | | |
| Calendar | ... | | |
| Miscellaneous | ... | | |
| Preliminary Register | ... | | |
| Sessions | ... | **SC.No.153/2007** | |
| Deposition of witness for | ..... | Prosecution | L.W.7 |
| | ..... | Defence | P.W.7 |
| | .... | Court | |
| Name | : | திரு.கிருஷ்ணசாமி த/பெ.பெருமாள்சாமி | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 23.11.2021

முதல் விசாரணை:

நான் துரைப்பாக்கத்தில் குடியிருக்கிறேன். நான் இரும்பு கடை வைத்துள்ளேன். அ.சா.6 என் அண்ணன். அந்தோணி, சக்திவேல், சரவணன், குமார், ஆனந்த், ஆண்டாள் அம்மாள், பாபு ஆகியோர் குப்பையில் இருந்து பிளாஸ்டிக் பொருட்களை எடுத்து என்னிடம் விலைக்கு கொடுப்பார்கள். பாபுவிற்கு ஒரு நாள் வெள்ளி மோதிரம் கிடைத்தது. அவர்களுக்குள் அதனால் சண்டை வந்தது. ஆண்டாள் அம்மாள் சண்டை போடாதீர்கள் என்று தட்டி கேட்டுள்ளார். ரமேஷ், வேலு, அந்தோணிராஜ் ஆகிய மூவரும் ஆண்டாள் அம்மாளை மிரட்டியிருக்கிறார்கள். காலையில் வரும் போது ஆண்டாள் அம்மாள், குமார், ஆனந்த் ஆகியோர் என் கடைக்கு பக்கத்தில் இறந்து கிடந்தார்கள். நான் துரைப்பாக்கம் காவல் நிலையத்திற்கு போன் செய்தேன். வேலு, அந்தோணிராஜ், ரமேஷ் ஆகியோர்கள் நான் மேலே சொன்னவாறு பேசியதை, கேட்டு நான் சொல்லியுள்ளேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்):-</u>**

வெள்ளி மோதிரம் சம்பந்தமாகவும், அதை திருடி கொடுத்தது பற்றியும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவ காலத்திற்கு முன்பு 7, 8 வருடங்களாக நான் காயிலாங் கடை நடத்தி வந்தேன். எனது கடைக்கும் சீவரன் குப்பை மேட்டிற்கும் இடையில் 2 கிலோ மீட்டர்

தூரமிருக்கும். நான் திருட்டு பொருள் வாங்கும் வழக்கம் உண்டு என்றாலும், அதனால் போலீசார் சொல்லி கொடுத்த படி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியவை அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், போலீசார் சொல்லி கொடுத்து நான் அவ்வாறு கூறுகின்றேன் என்று சொன்னாலும் சரியல்ல. காயிலாங் கடை நடத்துவதற்கு போலீசார் துணை வேண்டுமென்பதால் நான் போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

**மறு விசாரணை:-**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF : | THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGALPATTU. |
| Calendar | ... |
| Miscellaneous | ... |
| Preliminary Register | ... |
| Sessions | ... **SC.No.153/2007** |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for | ..... | Prosecution | L.W.10 |
| | ..... | Defence | P.W.8 |
| | .... | Court | |
| Name | : | திரு.கிருஷ்ணன் | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 07.12.2021

முதல் விசாரணை:

நான் பெரும்பாக்கம் என்ற கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்று நன்மங்கலம் கிராமத்தில் குடியிருக்கின்றேன். 2006ம் வருடம் நான் துரைப்பாக்கம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த காலத்தில் 12.02.2006 அன்று நானும் எனது உதவியாளர் முரளி என்பவரும் வேலை நிமித்தமாக கண்ணகிநகர் சென்று விட்டு திரும்ப வந்த போது கண்ணகிநகர் மைதானத்திற்கு பின்புறம் துரைப்பாக்கம் காவல் ஆய்வாளர் இரண்டு நபர்களை விசாரித்து கொண்டிருந்தார். அவர்கள் பெயரை நான் பின்னால் தெரிந்து கொண்டேன். அந்தோணி தாஸ் என்கிற அந்தோணி ராஜ், ரமேஷ் என தெரிந்து கொண்டேன். அந்தோணி என்பவர் மாலை 4.40 மணிக்கு கொடுத்த வாக்குமூலத்தில் நானும் முரளியும் சாட்சியாக இருந்து கையெழுத்து போட்டோம். மாலை 5.50 மணிக்கு ரமேஷ் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தில் நானும் முரளியும் சாட்சியாக இருந்து கையெழுத்து போட்டோம். பிறகு அந்தோணி வீட்டிலிருந்து இரவு 7.00 மணிக்கு இரண்டு உருட்டு கட்டைகளை ஆய்வாளர் கைப்பற்றினார். அதன் பிறகு ரமேஷ் என்பவர் ஸ்ரீவரம் குப்பைமேட்டில் உள்ள முள்புதரிலிருந்து ரத்தக்கறை படிந்த கத்தி போன்ற ராடு ஒன்றை எடுத்து கொடுக்க ஆய்வாளர் அதனை கைப்பற்றினார். அந்தோணி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். ரமேஷ்

கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். உருட்டு கட்டைகள் கைப்பற்றியதற்கான மகசர் அ.சா.ஆ.6. கத்தி போன்ற ராடு கைப்பற்றியதற்கான மகசர் அ.சா.ஆ.7. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்):-</u>**

இல்லை (கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்)

**<u>குறுக்கு விசாரணை (2ம் எதிரி தரப்பில்):-</u>**

இல்லை

**<u>மறு விசாரணை:-</u>**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | | | |
|---|---|---|---|
| IN THE COURT OF : | THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGALPATTU. | | |
| Calendar | ... | | |
| Miscellaneous | ... | | |
| Preliminary Register | ... | | |
| Sessions | ... | **SC.No.153/2007** | |
| Deposition of witness for | ..... | Prosecution | L.W.14 |
| | ..... | Defence | P.W.9 |
| | .... | Court | |
| Name | : | திரு.ராஜேந்திரன் | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 07.12.2021

முதல் விசாரணை:

நான் தற்போது செம்மஞ்சேரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 2006ம் வருடம் நான் துரைப்பாக்கம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்த போது குற்ற எண்.128/2006 வழக்கில் இறந்துபோன 3 நபர்களது பிரேதத்தை ஆய்வாளர் உத்தரவின் பேரில் ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் ஒப்படைத்து பிரேத கூராய்வு முடிந்தவுடன் பிரேதங்களை அவர்களது உறவினர்களிடம் நல்லடக்கத்திற்காக ஒப்படைத்தேன். ரத்தக்கறை படிந்த துணிமணிகளை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்):-**

நான் சொன்ன நாளில் ரத்தக்கறை படிந்த துணிகளை ஆய்வாளர் வசம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (2ம் எதிரி தரப்பில்):-**

இல்லை

**மறு விசாரணை:-**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | | | |
|---|---|---|---|
| IN THE COURT OF : | THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGALPATTU. | | |
| Calendar | ... | | |
| Miscellaneous | ... | | |
| Preliminary Register | ... | | |
| Sessions | ... | **SC.No.153/2007** | |
| Deposition of witness for | ..... | Prosecution | L.W.15 |
| | ..... | Defence | P.W.10 |
| | .... | Court | |
| Name | : | டாக்டர்.பாஸ்கர் | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 01.03.2022

முதல் விசாரணை:

நான் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் தலைமை பேராசிரியராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது மேல்மருவத்தூரில் குடியிருக்கிறேன். 2006ம் வருடம் நான் சென்னை அரசு மருத்துவமனையில் தலைமை பேராசிரியாக பணியிலிருந்த போது 12.02.2006ம் தேதி துரைப்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்ட வேண்டுகோளை பெற்று காவல் நிலைய குற்ற எண்.128/2006 என்ற வழக்கில் தொடர்புடைய குமார் என்கிற 45 வயதுடைய ஆணின் பிரேதத்தினை சடல கூராய்வு செய்தேன். வேண்டுகோள் கடிதத்தை தலைமை காவலர் ராஜேந்திரன், காவலர் எண்.8454 என்பவர் கொடுத்து, பிரேதத்தை அடையாளம் காட்டினார். பிரேத பரிசோதனையின் போது பிரேதத்தின் உடலில் பிண விரைப்பு தன்மை காணப்பட்டது. பிரேதத்தின் உடலில் 13 புறக்காயங்கள் காணப்பட்டன.

காயம் எண்.1 - வலது கன்னத்தில் 3 x 2 செ.மீ. அளவில் சிராய்ப்பு காயம்

காயம் எண்.2 - முதுகின் மேற்புறம் நடுபகுதியில் 4.5 x 2 செ.மீ. அளவில் சிராய்ப்பு காயம்

காயம் எண்.3 - பரு உடலின் பின்புற நடுபகுதியில் 13.5 x 3.5 முதல் 4.5 செ.மீ. x உடலின் உட்பகுதி ஆழம் வரையிலான, சாய்வான, அகற்று, அகழ்ந்த வெட்டு காயம்.

காயம் எண்.4 - கழுத்தின் கீழ்பகுதியில் இடப்புறம் மற்றும் பின்புறத்தில் 2 செ.மீ. இடைவெளியில்

6.5 செ.மீ. x 0.5 x 0.5 செ.மீ. அளவில் மூன்று சிராய்ப்பு காயங்கள்.

காயம் எண்.5 - தோலின் இடப்புறம் பின்பகுதியில் 7 x 0.5 x 0.5 செ.மீ. அளவில் சிராய்ப்பு காயம்

காயம் எண்.6 - கழுத்தின் கீழ்பகுதியின் இடப்புறம் மற்றும் தோளில் 2 x 2 செ.மீ. அளவில் ரத்தம் கன்றிய காயம்.
காயம் எண்.7 - முதுகின் நடுப்பகுதியில் 11 x 0.5 x 0.5 செ.மீ. அளவில் சிராய்ப்பு காயம்.

காயம் எண்.8 - முதுகின் கீழ்பகுதியில் குறுக்காக, சாய்வான 9.5 x 0.5 x 0.5 செ.மீ. அளவில் சிராய்ப்பு காயம்.

காயம் எண்.9 - உச்சந்தலையின் வலப்புறம், வலது காதின் பின்புறம் உள்ள எலும்பு புடைப்பிற்கு 12 செ.மீ. மேற்பகுதியில் 8.5 x 3 செ.மீ. x எலும்பு ஆழம் வரையிலான சாய்வான வெட்டு காயம். இதன் ஆழ்பகுதியில் உச்சந்தலையின் வலப்புற எலும்பின் புறத்தட்டு வெட்டுப்பட்டு காணப்பட்டது.

காயம் எண்.10 - தலையின் இடப்புறம் நீழ்வாக்கில் இடது காதின் பின்புறமுள்ள எலும்பு புடைப்பிற்கு 10 முதல் 13 செ.மீ. மேல்புறத்தில் 18 x 2 முதல் 4 செ.மீ. x தலைக்கோட்டின் உட்பகுதி ஆழம் வரையிலான, சாய்வான, அகன்ற, ஆழ்ந்த வெட்டு காயம். இதன் ஆழ்பகுதியில் தலைக்கோட்டின் வலப்புற எலும்புகள் இரண்டும் முற்றாக துண்டிக்கப்பட்டிருந்தது.

காயம் எண்.11 - தலையின் இடப்பறம் நீழ்வாக்கில் காயம் எண்.10க்கு 4 செ.மீ. மேற்புறத்தில் 8 x 3 x எலும்பு ஆழம் வரையிலான வெட்டு காயம்.

காயம் எண்.12 - தலையின் இடப்புறம் நீழ்வாக்கில் தலை, காது ஆகிய பகுதிகளில் 5.5 செ.மீ. x 2 x 1 செ.மீ. அளவிலான வெட்டு காயம். இடது செவி மடல் துண்டிக்கப்பட்டு காணப்பட்டது.

மேற்கொண்டு ஆய்ந்து பார்க்கையில் தலையை சார்ந்த திசுக்கள் வலப்புறம் 4 x 3 செ.மீ. அளவிலும், இடப்புறம் 11 x 7.5 செ.மீ. அளவிலும் ரத்தம் கன்றி காணப்பட்டது. வலப்புற தலைக் கூட்டு எலும்பு 4 x 1 x 0.5 செ.மீ. அளவில் வெட்டு பட்டு காணப்பட்டது. தலையின் இடப்புறம் பக்கவாட்டு மற்றும் இடப்புற எலும்புகள் 9 x 4 செ.மீ. அளவில் முறிவுற்றும், உட்குழிந்தும் காணப்பட்டது. தலையின் பக்கவாட்டு மற்றும் பின்புற எலும்புகளுக்கு இடையிலான இணைப்பு விரிசலுற்று காணப்பட்டது. தலையை சார்ந்த மூளை கோளங்களில் உறைகளின் அடிப்பரப்பில் குருதி கசிந்து காணப்பட்டது. இடப்புற பெரு மூளை வெடுப்பகுதியில் சிதைந்தும், வெளிகசிந்தும்

காணப்பட்டது. நாவடி எலும்பு, குரல்வலை எலும்பு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை. விலா கூடு, இதயம், நுரையீரல் மற்றும் உள்ளுறுப்புக்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவுமில்லை. கழுத்தின் இடப்புற திசுக்கள் பரவலாக ரத்தம் கன்றி காணப்பட்டது.

ஆகையினால் மேற்குறிப்பிடப்பட்ட நபர் தான் உற்ற தலை காயங்களின் காரணமாக இறந்தார் என்று சான்றளித்தேன். அந்த சான்று அ.சா.ஆ.8.

அதே நாளில் ஆண்டாள் எனும் 36 வயதுடைய பெண்ணின் உடலை நண்பகல் 12.05 மணிக்கு பிரேத கூராய்வு தொடங்கப்பட்டது. பிரேதத்தின் உடலில் முற்றாக விரைப்பு தன்மை காணப்பட்டது. பிரேதத்தின் உடலில் 10 புறக்காயங்கள் காணப்பட்டன.

காயம் எண்.1 - நெற்றியின் வலப்புறம் 3.5 x 2 x 1 செ.மீ. அளவிலான செதுக்கப்பட்ட காயம். அதன் வெளிக்கோணங்கள் குறுகியும், விளிம்புகள் சீராக வெட்டுப்பட்டும் காணப்பட்டன.

காயம் எண்.2 - நெற்றியின் வலப்புறம் 4.5 x 2.5 x 1 செ.மீ. அளவிலான இன்னொரு செதுக்கப்பட்ட காயம்.

காயம் எண்.3 - இடது கன்னந்தடுப்பு எலும்பு பகுதியில் 4.5 x 2.5 x எலும்பு ஆழம் வரையிலான செதுக்கப்பட்ட காயம்.

காயம் எண்.4 - முகத்தின் இடப்புறம், மேல் உதடு, கன்னம் ஆகியவற்றில் குறுக்காக 7 x 0.5 x 0.5 செ.மீ. அளவிலான வெட்டு காயம்.

காயம் எண்.5 - முகத்தின் இடப்புறம், இடப்புற நாசி, மற்றும் உதடுகளின் குறுக்காக 3 x 1.5 x மூக்கின் உட்புற ஆழம் வரையிலான வெட்டு காயம்.

காயம் எண்.6 - நெற்றியின் இடப்புறம், இடது புருவத்திற்கு 2 செ.மீ. மேற்புறத்தில் குறுக்காக 4 x 0.5 x 0.5 செ.மீ. அளவிலான வெட்டு காயம்.

காயம் எண்.7 - இடது காதின் நடுப்பகுதி, தலையின் இடப்புறம் மற்றும் டமுரகத்தில் 6 x 2 x 1 செ.மீ. அளவிலான வெட்டு காயம். இடது காது மடல் துண்டிக்கப்பட்டும், இடப்புற பக்கவாட்டு எலும்பு துண்டிக்கப்பட்டும் காணப்பட்டது

காயம் எண்.8 - இடது காதின் மேற்பகுதி மற்றும் தலையின் இடப்புறம் 8 x 2.5 x எலும்பு ஆழம் வரையிலான வெட்டு காயம். இதனால் இடது காது மடலும், அதை சார்ந்த தலையின் இடப்புற திசுக்களும் துண்டிக்கப்பட்டு காணப்பட்டது. இதன் ஆழ்பகுதியில் தலையின் இடப்புற எலும்பு 4.5

x 3 செ.மீ. அளவில் உடைந்தும், உட்பிழிந்தும், மூளையை சார்ந்த சவ்வு கிழிந்தும் காணப்பட்டதை உணர முடிந்தது.

காயம் எண்.9 - காது மடல் 4 செ.மீ. பின்புறமாக 4 x 2 x எலும்பு அளவு. அளவிலான வெட்டு காயம். இதன் ஆழ்பகுதியில் எலும்புகள் உடைந்தும், உட்பிழிந்தும் காணப்பட்டது.

காயம் எண்.10 - இடப்புற நாசியை சார்ந்து 3 x 1 x 1.5 செ.மீ. அளவிலான வெட்டு காயம்.

மேற்கொண்டு ஆய்ந்து பார்க்கையில் உச்சந்தலையை சார்ந்த திசுக்கள் தலையின் வலப்புறம் 8 x 5 செ.மீ. அளவிலும், தலையின் இடப்புறம் திசுக்கள் 14 x 8 செ.மீ. அளவிலும், ரத்தம் கன்றி காணப்பட்டது. தலையின் இடப்புற பக்கவாட்டு எலும்ப காயம் எண்.8 மற்றும் 9ன் ஆழ்பகுதியில் முறிந்தும், உட்புழிந்தும் காணப்பட்டது. காயம் எண்.7ன் ஆழ்பகுதியில் தலையின் இடப்புற பக்கவாட்டு எலும்பில் வெட்டு காயம் காணப்பட்டது. புழிந்து காணப்பட்ட எலும்பின் விரிசல்கள் தலைக்கூட்டின் அடிப்பகுதி வரை பரவி காணப்பட்டது. மூளை கோளத்தை சார்ந்த உறைகள் கிழிந்தும், அதன் ஆழ்பகுதியில் ரத்தம் கசிந்தும் காணப்பட்டது. இடப்புற பெரு மூளையின் வெளிப்பகுதியின் மேற்பரப்பில் மூளைக் கோளங்கள் ரத்தம் கன்றி காணப்பட்டது. தலைக்கூட்டின் அடிப்பரப்பு முன் மற்றும் நடு பகுதியில் விரிசல் உற்று காணப்பட்டது. முகத்தை சார்ந்த கன்னகதுப்பு எலும்பும், மேல்தாடை எலும்பும் முறிவுற்றும், அதை சார்ந்த திசுக்கள் ரத்தம் கன்றியும் காணப்பட்டது. நாவடி எலும்பு, குரல்வலை எலும்பு மற்றும் கழுத்து புற திசுக்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை. இதயம், இரைப்பை, கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் ஆகியவை வெளிறி காணப்பட்டது. நுரையீரலில் குருதி தேக்கமுற்ற காணப்பட்டது. கர்ப்பப்பை, சிறுநீர்ப்பை, இடுப்பு எலும்பு மற்றும் முதுகு எலும்பு ஆகியவற்றில் மாற்றம் ஏதுமில்லை.

ஆகையினால் மேற்குறிப்பிடப்பட்ட நபர் தான் உற்ற தலைக்காயங்களின் காரணமாக இறந்துள்ளார் என்று சான்றிளத்துள்ளேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.9.

அதே நாளில் பிற்பகல் 1.40 மணிக்கு 19 வயதுடைய ஆனந்தன் என்பவருடைய உடலை பிரேத கூராய்வு தொடங்கப்பட்டது. பிரேதத்தின் உடலில் பிணவிரைப்பு தன்மை காணப்பட்டது. பிரேதத்தின் உடலில் 8 புறக்காயங்கள் காணப்பட்டன.

காயம் எண்.1 - முகத்தின் வலப்புறம் கன்னக்கதுப்பு பகுதியில் 4 x 3 செ.மீ. அளவிலான சிராய்ப்பு காயம்.

காயம் எண்.2 - வலது கன்னத்தில் 3 x 2 செ.மீ. அளவிலான மற்றொரு சிராய்ப்பு காயம்

காயம் எண்.3 - நெற்றியின் வலது மற்றும் இடப்பகுதி, வலது, இடது விழிக்கூடு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய முகத்தின் மேற்பகுதியில் விரிந்த, உட்குழிந்த, குறிப்பிட்ட வடிவில்லாத 16 x 4 முதல் 6 செ.மீ. x தலைக்கூட்டின் அடிப்பரப்பு மற்றும் முகத்தின் ஆழ்ப்பகுதி வரையிலான ரத்தம் கன்றிய சிதைந்த காயம். இதன் உட்புறத்தில் முகத்தின் உட்பகுதி எலும்புகள் உடைப்பட்டு சிதைந்து காணப்பட்டது.

காயம் எண்.4 - மூக்கு, மேல்தாடையின் வலது மற்றும் இடப்பகுதி ஆகிய முகத்தின் நடுப்பகுதியில் 7.5x 2 முதல் 4 செ.மீ. x முகத்தின் ஆழ்ப்பகுதி வரையிலான சிதைந்த காயம். இதன் ஆழ்பகுதியில் அப்பகுதியை சார்ந்த எலும்புகள் சிதைவுற்றும், பற்கள் பெயர்ந்தும் காணப்பட்டன.

காயம் எண்.5 - இடது கன்னக்கதுப்பு பகுதியிலன் எலும்பு பகுதியில் 6 x 2.5 செ.மீ. அளிவில் ரத்தம் கன்றிய காயம்.

காயம் எண்.6 - வலது சுட்டு விரலின் புறப்பகுதியில் 1 x 1 x 0.5 செ.மீ. அளவிலான சிதைந்த காயம்.

காயம் எண்.7 - வலது நடுவிரலின் புறப்பகுதியில் 1 x 1 x 1 செ.மீ. அளவிலான சிதைந்த காயம்.

காயம் எண்.8 - வலது கையின் புறப்பகுதியில் 1 x 1 x 0.5 செ.மீ. அளவில் சிதைந்த காயம்.

மேற்கொண்டு ஆய்ந்து பார்க்கையில் உச்சந்தலையை சார்ந்த திசுக்கள் தலையின் வலப்புறம் 7 x 4.5 செ.மீ. அளவிலும், முன்னந்தலை மற்றும் வலப்புற திசுக்கள் 12.5 x 1.5 செ.மீ. அளவிலும், ரத்தம் கன்றி காணப்பட்டது. தலைக்கூட்டின் வலப்புகுதியும் அதை சார்ந்த பக்கவாட்டு எலும்பு ஆழ்பகுதியில் முறிந்து காணப்பட்டது. மூளை கோளத்தை சார்ந்த உறைகள் கிழிந்தும், அதன் ஆழ்பகுதியில் ரத்தம் கசிந்தும் காணப்பட்டது. பெருமூளையின் முன்புற கோளமும், வலப்புற கோளமும் ரத்தம் கன்றியும், சிதைந்தும் காணப்பட்டது. தலைக்கூட்டின் அடிப்பகுதி முன்புறத்தில் முறிவுற்று காணப்பட்டது. முகம் மற்றும் தலையை சார்ந்த காற்று குமிழ்களில் குருதி கசிந்து காணப்பட்டது. முகத்தை சார்ந்த வெளிபுற மேற்பரப்பும், மேல்தாடையும், மேல்அன்னமும், முறிவுற்றும், அதை சார்ந்த திசுக்கள் ரத்தம் கன்றியும் காணப்பட்டது. மேல்தாடை எலும்பின் வலப்புறமும், கீழ்த்தாடை எலும்பின் வலப்புறமும், முறிவுற்றும், அப்பகுதியை சார்ந்த பற்கள் இடம் பெயர்ந்தும் காணப்பட்டது. நாவடி எலும்பு,

குரல்வலை எலும்பு, விலா கூடு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை. இதயத்தில் குறைந்த அளவில் திரவ நிலையில் குருதி காணப்பட்டது. நுரையீரலில் குருதி தேக்கமுற்று காணப்பட்டது. இரைப்பையில் 50 கிராம் அளவில் பகுதி செரிக்கப்பட்ட உணவு காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் வெளிறி காணப்பட்டது. மற்ற உள்ளுறுப்புக்களில் மாற்றம் ஏதுமில்லை.

ஆகையினால் மேற்குறிப்பிடப்பட்ட நபர் தான் தனது தலை மற்றும் முகத்தில் உண்டான காயங்களின் காரணமாக இறந்துள்ளார் என்று சான்றிளத்துள்ளேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.10.

கத்தி, உருட்டு கட்டை, கல் போன்ற ஆயுதங்களால் இறந்துபோன நபர்கள் தாக்கப்பட்டிருந்தால், அவர்களுக்கு மேலே சொன்ன காயங்கள் ஏற்பட்டு அவர்கள் இறந்திருக்க வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

**<u>குறுக்கு விசாரணை (1, 2 எதிரிகள் தரப்பில்):-</u>**

குமார் என்பவரது இரைப்பை காலியாக இருந்தது என பிரேத கூராய்வு அறிக்கையில் சொல்லியுள்ளேன். ஒரு நபர் அருந்திய உணவு முழுமையாக செரிமாணம் ஆவதற்கு சுமார் 4 மணி நேரம் ஆகும். உடல் உள்ளுறுப்புக்களை ரசாயன பரிசோதனைக்கு அனுப்பியுள்ளேன். அது குறித்து அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனந்தனுக்கு தலை மற்றும் முகத்தில் இருந்த நான் கூறிய காயங்கள் விபத்தினால் கூட ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு என்றால் சரிதான். நான் காவல் துறையினர் கேட்டு கொண்டதற்கிணங்க ஒரு தவறான அறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:-</u>**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | | | |
|---|---|---|---|
| IN THE COURT OF : | THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGALPATTU. | | |
| Calendar | ... | | |
| Miscellaneous | ... | | |
| Preliminary Register | ... | | |
| Sessions | ... | **SC.No.153/2007** | |
| Deposition of witness for | ..... | Prosecution | L.W.17 |
| | ..... | Defence | P.W.11 |
| | .... | Court | |
| Name | : | திரு.ராஜேந்திரன் | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 17.03.2022

முதல் விசாரணை:

நான் கடைசியாக சேலையூரில் காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து ஓய்வு பெற்று பெருங்குடியில் குடியிருக்கிறேன். கடந்த 2006ம் வருடம் துரைப்பாக்கம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த காலத்தில் 10.02.2006 அன்று காலை 6.00 மணிக்கு நான் காவல் நிலைய அலுவலில் இருந்த போது கண்ணகிநகரை சேர்ந்த குமார் மகன் முருகன் என்பவர் நிலையம் நேரில் ஆஜராகி ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அதை நான் பதிவு செய்தேன். நான் அதை அவரிடம் படித்து காண்பித்து அதன் பிறகு அவரிடம் அதில் கையெழுத்து வாங்கினேன். முருகனோடு வந்த அவரது மாமாவும் பதிவு செய்யப்பட்ட புகார் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தார். புகாரின் அடிப்படையில் துரைப்பாக்கம் காவல் நிலைய குற்ற எண்.128/2006 இதச 302 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.11.

அசல் ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். நான் வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடமான சீவரம் பெருங்குடி குப்பை மேட்டிற்கு 7.30 மணிக்கு சென்றேன். சம்பவ இடத்தை சாட்சிகள் நாகராஜன், மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அவை முறையே அ.சா.ஆ.12 மற்றும் அ.சா.ஆ.13.

சம்பவ இடத்தில் 3 பிரேதங்கள் இருந்தது. பஞ்சாயத்தார் முன்னிலையில் இறந்து கிடந்த ஆண்டாள், குமார், ஆனந்தன் ஆகியோரது பிரேதங்கள் மீது விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கைகள் 3 தயார் செய்தேன். அவை மூன்றும் முறையே அ.சா.ஆ.14 முதல் அ.சா.ஆ.16.

தலைமை காவலர் ராஜேந்திரன் மூலமாக பிரேத பரிசோதனை செய்வதற்காக விண்ணப்பம் கொடுத்து ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். 12.45 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து ரத்தக்கறை படிந்த மண், மாதிரி மண், ரத்தக்கறை படிந்த கருங்கல் ஆகியவற்றை மகசர் தயார் செய்து அதே சாட்சிகள் முன்பு கைப்பற்றினேன். மகசர் அ.சா.ஆ.17.

வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் முருகன், பெருமாள், கட்டைய்யன், தனம் மற்றும் பாபு, ஏழுமலை ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். பிரேத கூராய்வு முடிந்தவுடன் தலைமை காவலர் மூலம் பிரேதங்களை நல்லடக்கத்திற்காக உறவினர் வசம் ஒப்படைக்க சொன்னேன்.

பின்னர் எதிரிகளை பிடிப்பதற்காக தனிப்படை அமைக்கப்பட்டது. 12.02.2006ம் தேதி ஞாயிற்று கிழமை 16.30 மணிக்கு கண்ணகிநகர் பின்புறமுள்ள மைதானத்தில் சந்தேகத்திற்கு இடமாக இருந்த நபர்களை பிடித்து விசாரணை செய்தேன். அதில் ஒருவர் பெயர் அந்தோணி என்றும், மற்றொருவர் ரமேஷ் என்றும் கூறினார்கள். நான் அவர்களை விசாரணை செய்ய குற்ற எண்.128/2006ல் பதிவு செய்யப்பட்ட கொலை வழக்கு எதிரிகள் என தெரிய வந்தது. அவர்களை கைது செய்தேன். சாட்சிகள் கிருஷ்ணன், முரளி ஆகியோர்கள் முன்னிலையில் 16.40 மணிக்கு அந்தோணி என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். அதே சாட்சிகள் முன்னிலையில் 17.50 மணிக்கு ரமேஷ் என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன்.

ரமேஷ் தன்னை அழைத்து சென்றால் கொலை செய்ய பயன்படுத்திய சவுக்கு கட்டையை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அவர் ஸ்ரீவரம் குப்பை மேட்டிற்கு எங்களை அழைத்து சென்றார். சுமார் 2 அடி நீளமுள்ள பட்டையான கத்தியுடன் கூடிய இரும்பு ராடு ஒன்றை முள்புதரில் இருந்து எடுத்து கொடுத்தார். அதற்காக ஒரு மகசர் தயார் செய்தேன். 19.00 மணிக்கு எதிரி அந்தோணி செல்வகணபதி அவன்யூ 1வது தெரு, ஸ்ரீவரம் என்ற இடத்தில், அவரது வீட்டின் ஓலையில் சொருகி வைத்திருந்த தைல மர உருட்டு கட்டை ஒன்றை எடுத்து

ஆஜர் செய்தார். அதை மகசர் தயார் செய்து சாட்சிகள் கிருஷ்ணன், முரளி ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றினேன்.

ரமேஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.18. அவரிடமிருந்து கைப்பற்றிய பொருட்களுக்காக தயார் செய்த மகசர் அ.சா.ஆ.19. அந்தோணி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.20. அவரிடமிருந்து கைப்பற்றிய பொருட்களுக்காக தயார் செய்த மகசர் அ.சா.ஆ.21.

எதிரிகள் மற்றும் சொத்துக்களோடு காவல் நிலையம் வந்து, எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 13.02.2006ம் தேதி திங்கட்கிழமை 17.45 மணிக்கு பாண்டியன் நகர், சுடுகாட்டில் சந்தேகத்திற்கு இடமான 2 நபர்களை விசாரணை செய்தேன். அவர்கள் பெயர் வேலு என்கிற சக்திவேல் என்றும், சரவணன் என்றும் கூறினார்கள். அவர்களை தீவிரமாக விசாரணை செய்தேன். அவர்கள் 128/2006 வழக்கில் சம்மந்தப்பட்டவர்கள் என்று தெரியவந்தது. அந்த இருவரையும் 17.50 மணிக்கு சாட்சிகள் கிருஷ்ணன் மற்றும் ராமலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் கைது செய்தேன்.

17.50 மணிக்கு சக்திவேலிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். 18.50 மணிக்கு சரவணனிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். அவர்கள் இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டார்கள். அவர்களை அழைத்து சென்றால், அவர்கள் மறைத்து வைத்திருக்கும் கத்தியை எடுத்து கொடுப்பதாக சொன்னார்கள். ஸ்ரீவரம், குப்பைமேட்டு பகுதிக்கு சென்றோம். இரண்டு பேரும் சேர்ந்து ஒரு கத்தியை எடுத்து கொடுத்தார்கள். அதே சாட்சிகள் முன்னிலையில் அதற்காக ஒரு மகசர் தயார் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலங்களில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.22 மற்றும் அ.சா.ஆ.23. அவர்க்ளிடமிருந்து கைப்பற்றிய பொருட்களுக்காக தயார் செய்த மகசர் அ.சா.ஆ.24.

எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களோடு காவல் நிலையம் சென்று, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்தேன். தடய அறிவியல் ஆய்வகத்திற்கு பரிசோதனைக்கு அனுப்புவதற்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் கொடுத்தேன்.

பிரேத கூராய்வு செய்த மருத்துவரை விசாரணை செய்து, ஆவணம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். செராலஜி அறிக்கை அ.சா.ஆ.25, பயாலஜிக்கல் அறிக்கை அ.சா.ஆ.26.

வழக்கின் விசாரணை முடித்து, எதிரிகள் மீது இதச பிரிவுகள் 302 உ/இ 34ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையின் போது சாட்சிகள் அனைவரும் அரசு தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (1வது எதிரி தரப்பில்):-**

இல்லை (கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்)

**குறுக்கு விசாரணை (2வது எதிரி தரப்பில்):-**

இல்லை (கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்)

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நானும் கிராம நிர்வாக அலுவலரும் கண்ணகிநகர் மைதானத்திற்கு செல்வதற்கு முன்பு போலீசார் எவ்வளவு நேரம் அந்தோணியை விசாரித்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் அங்கு போகும் போது விசாரித்தார்கள். பொது மக்கள் எவ்வளவு பேர் இருந்தார்கள் என்றால் 4, 5 பேர் இருந்தார்கள். எவ்வளவு போலீசார் இருந்தார்கள் என்றால் 2, 3 போலீசார் இருந்தார்கள். வாக்குமூலத்தை ஆய்வாளர் எழுதினாரா என்றால் ஆய்வாளர் தான் எழுதினார். நான் எழுதியதில் கையெழுத்து போட்டேனா அல்லது டைப் செய்ததில் கையெழுத்து போட்டேனா என்றால் எழுதிய பேப்பரில் தான் கையெழுத்து போட்டேன். வாக்குமூலம் பதிவு செய்த மைதானத்தில் இருந்து சீவரம் குப்பை மேடு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 3 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் காவல் நிலையத்திலிருந்து சீவரம் குப்பை மேடு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ஒரு கிலோ மீட்டர் தூரமிருக்கும். சீவரம் குப்பை மேட்டில் எவ்வளவு குடிசைகள் இருந்தது என்றால இருட்டாக இருந்ததால் சரியாக ஞாபகமில்லை. நான் சொன்னவாறு நானும் கிருஷ்ணன் என்பவரும் அந்த பகுதிக்கு போகவில்லை என்றும், எங்கள் முன்னிலையில் எதிரி அந்தோணி மற்றும் ரமேஷ் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பின்னிட்டு காவல் ஆய்வாளர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த ஆவணத்தில் நான் காவல் நிலையத்தில் வைத்து சாட்சி கையெழுத்து போட்டுள்ளதால் என்னுடைய சாட்சி சட்டப்படி ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் கிராம உதவியாளராக எத்தனை வருடம் பணி செய்துள்ளேன் என்றால் 30 வருடம் பணி செய்துள்ளேன். சம்பவ காலத்தில் எந்த பகுதியில் கிராம உதவியாளராக பணிபுரிந்தேன் என்றால் துரைப்பாக்கத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்தேன். நானும், கிராம நிர்வாக அலுவலரும் வெளி அலுவலுக்கு செல்லும் போது எங்கள் அலுவலக ஆவணத்தில் குறிப்பிட்டு விட்டு செல்வோம் என்றால் சரிதான். பாண்டியன் சுடுகாட்டிற்கும், சீவரம் குப்பை மேட்டிறக்கும் இடையில் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 3 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் போலீசார் விசாரணையில் எதிரிகளை தெரியும் என்று சொல்லியுள்ளேனா என்றால் தெரியும் என்று சொல்லியுள்ளேன். சீவரம் குப்பை மேட்டு பகுதி எங்கள் கிராம பகுதியில் வரவில்லை. அது சீவரம் பகுதியில் வருகிறது. சீவரம் குப்பை மேட்டிற்கு நானும் கிராம நிர்வாக அலுவலரும் சென்ற போது எந்த குடிசை பகுதியும் அங்கில்லை. என்னையும், கிராம நிர்வாக அலுவலரையும் போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க தான் கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல. நாங்களாக தான் கையெழுத்து போட்டோம். இரண்டு ஒப்புதல் வாக்குமூலத்திலும் கிராம நிர்வாக அதிகாரி கையெழுத்து மட்டும் தான் போட்டுள்ளார், அதில் அலுவலக முத்திரை எதுவும் போடப்படவில்லை. நானும், கிராம உதவியாளரும் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கையெழுத்து போடவில்லை என்றும், காவல் துறையினரின் உதவி தேவைப்படுவதால் தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

**SC.No.153/2007 ல் 2ம் எதிரி தரப்பு மற்றும் SC.No.132/2010ல் 4ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.ஆ.1 புகாரை சாட்சியிடம் காண்பித்து இதனை யார் எழுதியது என்றால் போலீசாரிடம் நான் சொல்லி போலீஸ்க்காரர் எழுதினார். சம்பவ சமயத்தில் நான் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் சுத்தம் செய்வது தான் என் தொழில். நான் சீவரம் குப்பைமேட்டில் தான் குப்பை சேகரிப்பேன் என்றால் சரிதான். சீவரம் குப்பைமேடானது சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானதாகும். சென்னை நகரத்தின் குப்பை கழிவுகள் அனைத்தும் சீவரம் குப்பைமேட்டில் தான் கொட்டுவார்கள் என்றால் சரிதான். அந்த சீவரம் குப்பைமேட்டில் குப்பை லாரி வரும் போது சென்னை மாநகராட்சியில் வேலை செய்பவர்கள் தான் இருப்பார்கள் என்றால் சரிதான். அவ்வாறு குப்பை லாரியில் வரும் குப்பையை எடை போடுவதற்காக சென்னை மாநகராட்சியில் வேலை செய்பவர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். அந்த குப்பை மேட்டில் சராசரி ஒரு நாளைக்கு 300 பேர்கள் குப்பை பொறுக்குவார்கள். அந்த குப்பைமேட்டில் யாரும் தங்கி குடித்தனம் செய்யமாட்டார்கள் என்றால் சரிதான். சென்னை மாநகராட்சி சீவரம் குப்பைமேட்டில் மாலை 6.00 மணிக்கு மேல் யாரும் குப்பை பொறுக்க அனுமதிக்கமாட்டார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால் விடியற்காலை 4.00, 5.00 மணிக்கெல்லாம் புகார் கொடுத்தேன். இரவு 12.00 மணிக்கெல்லாம் சீவரம் குப்பை மேட்டிற்கு போலீசார் வந்தார்கள். குப்பைமேட்டில் உள்ள 3 பிரேதத்தையும் அதிகாலை 5.00, 5.30 மணிக்கு போலீசார் எடுத்து சென்று விட்டார்கள். பிரச்சனைக்கான வெள்ளி மோதிரம் போலீசார் கைப்பற்றினார்களா என்றால் கவனமில்லை. குப்பைமேட்டில் இரவு நேரத்தில் மத்திய ரிசர்வ் போலீசார் தான் பாதுகாப்பு பணியில் இருப்பார்கள் என்றால் சரிதான். 24 மணி நேரமும் சென்னை மாநகராட்சி ஆட்கள் சீவரம் குப்பைமேட்டில் இருப்பார்கள்

என்றால் சரிதான். சீவரம் குப்பைமேட்டில் 4 பக்கத்திலும் லைட்டுகள் போடப்பட்டிருக்கும் என்றால் போடப்பட்டிருக்கும். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். காவல் நிலையத்தில் மறுநாள் என்னை விசாரித்தார்கள். நானும், பெருமாள், கட்டையனும் பிரேதங்களை தூக்கிய போது எங்கள் மீது ரத்தக்கறை படிந்ததா என்றால் நான் பிரேதத்தை தூக்கவில்லை. பெருமாளும், கட்டையனும் பிரேதங்களை தூக்கினார்களா என்றால் ஞாபகமில்லை. என்னை போலீசார் விசாரித்த போது, அந்த சமயம் 9.00, 10.00 மணியிருக்கும், அலறல் சவுண்டு கேட்டது, நானும் என் தாத்தாவும் எழுந்து ஓடி வந்தபோது அப்பொழுது வேலு, சரவணனும் முகத்திலும், தலையிலும் மாறி, மாறி வெட்டி விட்டாங்க, ரமேஷ் என் அம்மா தலையில் வெட்டி விட்டார், அந்தோணி என் தம்பி தலையில் கல்லை தூக்கி போட்டு விட்டான் அலறல் சத்தம் கேட்டு நாங்கள் ஓடி போய் பார்த்தோம் என்றும், 20 அடி தூரத்தில் இருந்து ஓடினோம் என்று சொல்லியுள்ள சாட்சியத்தை போலீசார் என்னை விசாரித்த போது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேலும் 3, 4 அவர் கழித்து பிறகு வந்து பார்த்தோம் என்ற சங்கதியை போலீசார் என்னை விசாரித்த போது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு எழுத, படிக்க தெரியும் என்ற விவரத்தை போலீசா˙ என்னை விசாரித்த போது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவ காலத்தில் பனிபொழிவு இருக்கும் என்றால் இருக்கும். நான், பெருமாள், கட்டைய்யன் ஆகியோர் இறந்துபோன நபர்களுக்கு இரவு சாப்பாடு கொண்டு போகவில்லை என்று சொன்னால் சரியல்ல, நாங்கள் இரவு சாப்பாடு கொண்டு போனோம். நான் சம்பவத்தை 20 அடி தூரத்தில˙ பார்த்தோம˙ என்று பொய்யாக சொல்கிறேன் என்றும், இரவு நேரத்தில் குப்பைமேட்டிற்கு செல்ல முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. வேறு வழியாக செல்லலாம். எங்கள் குடும்பத்தை சேர்ந்தவர்கள் எப்படி இறந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றும், நான் போலீசார் சொல்லிக் கொடுத்து பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான், பெருமாள், கட்டையன் ஆகிய மூவரும் மேற்படி சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும், பின்னிட்டு ஜோடனை செய்து புகார் கொடுத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் உண்மையில் சம்பவத்தை பார்த்திருந்தால் மாநகராட்சி ஊழியர்களிடம் சம்பவம் குறித்து சொல்லியிருப்பேன் என்றும், சம்பவத்தை பார்க்காததால் தான் மாநகராட்சி ஊழியர்களிடம் சம்பவம் குறித்து சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் உறவினர்கள் இறந்து கிடந்த தார்ப்பாயை போலீசார் எடுத்து சென்றார்களா என்றால் எடுத்து சென்றார்கள். நான் குப்பையில் சேகரிக்கும் பொருட்களை எந்த காயிலாங்கடையில் போடுவேன் என்றால் துண்டுமீசை காயிலாங்கடையில் போடுவேன். துண்டுமீசை காயிலாங்கடைக்கும் சீவரம் குப்பைமேட்டிற்கும் இடையில் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 30, 40 அடி தூரமிருக்கும். பிரேதங்கள் மூன்றும் காயிலாங்கடைக்கு அருகில் இருந்தது. நான் போலீசார் சொல்லிக் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

## SC.No.153/2007ல் 3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1, 2 மற்றும் 4ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை தானும் ஏற்றுக் கொள்வதாக தெரிவித்தார்.

**மறு விசாரணை**

இல்லை

**<u>SC.No.153/2007ல் 1, 2ம் எதிரிகள் தரப்பு மற்றும் SC.No.132/2010ல் 4ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சாட்சி முருகன் எனக்கு என்ன உறவு என்றால் என் தங்கையின் மகன். இறந்துபோனவர்கள் எனது உறவினர்கள் ஆவர். எனக்கு சம்பவ காலத்தில் என்ன வேலை என்றால் கட்டிட வேலை செய்து வந்தேன். நான் சீவரம் குப்பைமேட்டிற்கு சம்பவத்திற்கு முன்பு போனது கிடையாது என்றால் குப்பைமேட்டிற்கு உள்ளே போனது கிடையாது, அந்த வழியாக சென்றுள்ளேன். இறந்துபோனவர்கள் இரவில் எங்கு தங்குவார்கள் என்றால் குப்பைமேட்டிற்குள் குடிசை போட்டு தங்குவார்கள். இறந்துபோனவர்கள் குடும்பம் தவிர்த்து எத்தனை குடும்பங்கள் குடிசை போட்டு தங்கியிருந்தார்கள் என்றால் 5, 6 குடும்பங்கள் தங்கியிருந்தார்கள். நான், என் அப்பா, என் தங்கை மகன் ஆகியோர்கள் சம்பவ நாளன்று சாப்பாடு எதுவும் கொண்டு போகவில்லை என்றால் நானும், என் அப்பாவும் தான் சாப்பாடு கொண்டுபோனோம், முருகன் எடுத்து செல்லவில்லை. நானும், என் அப்பாவும் ஒருபோதும் சீவரம் குப்பைமேட்டிற்கு சென்றதில்லை என்றால் போனோம். அந்த குப்பைமேடானது லைட் உள்ள பகுதியா அல்லது இருட்டான பகுதியா என்றால் தள்ளி, தள்ளி லைட் இருந்தது. அந்த குப்பைமேட்டு பகுதியில் நிறைய நபர்கள் குப்பை பொறுக்குவதற்காக இருப்பார்களா என்றால் ஒருசிலர் இருப்பார்கள். நான்கு பேர் கத்தி, உருட்டு, ராடு, கல் ஆகியவற்றை எடுத்து வந்தார்கள் என்று போலீசார் விசாரித்த போது சொல்லியுள்ளேன். நான் எனது முதல் விசாரணையின் போது சரவணன், ரமேஷ் ஆகியோர்கள் கத்தி வைத்து குமாரின் தலை, முஞ்சில் வெட்டி விட்டார்கள் என்றும், வேலு என்பவர் என் தங்கச்சியை மூஞ்சி, தலையில் வெட்டிவிட்டான் என்றும், அந்தோணி என்பவர் கல்லை தூக்கி ஆனந்தனின் தலையில் போட்டு விட்டான் என்று சொல்லியுள்ள விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எனது முதல் விசாரணையின் போது இரண்டு அவர் கழித்து பொறுமையாக வந்து

பார்த்தோம் என்று சொல்லியுள்ள விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவ இடத்திற்கு போலீசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் காலை 6.00 மணிக்கு வந்தார்கள். இறந்துபோன 3 பிரேதங்களையும் எப்பொழுது போலீசார் எடுத்து சென்றார்கள் என்றால் காலை 9.00 மணிக்கு 3 பிரேதங்களையும் போலீசார் எடுத்து சென்றார்கள். இந்த சம்பவம் குறித்து போலீசார் என்னை எப்பொழுது விசாரித்தார் என்றால் புகார் கொடுத்த அன்றே சாயங்காலம் போலீசார் என்னை விசாரித்தார்கள். நானும், என் அப்பாவும் சம்பவ இடத்திற்கு சாப்பாடு எடுத்து செல்லவில்லை என்றும், நானும், என் அப்பாவும், முருகனும் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், இறந்துபோன நபர்கள் எனது உறவினர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவ காலத்தில் என் வீடு துரைப்பாக்கம், கண்ணகிநகரில் இருந்தது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

## SC.No.153/2007ல் 3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1, 2 மற்றும் 4ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை தானும் ஏற்றுக் கொள்வதாக தெரிவித்தார்.

**மறு விசாரணை**

இல்லை

**<u>3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 2006ம் ஆண்டு துரைப்பாக்கம் கிராம உதவியாளராக இருந்தேன் என்றால் சரிதான். 03.02.2006ம் தேதி அன்று நானும், கிராம நிர்வாக அதிகாரியும் கண்ணகிநகருக்கு எங்கள் பணிநிமித்தமாக சென்றிருந்தோம் என்றால் சரிதான். கண்ணகிநகர் துரைப்பாக்கம் பஞ்சாயத்தில் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் அவ்வாறு பணிக்கு செல்லும்போது நோட்டில் எழுதும் பழக்கம் உள்ளதா என்றால் அதுபோல் நோட்டில் எழுதும் பழக்கம் கிடையாது, 24 மணிநேரம் பணியாகும். துரைப்பாக்கத்தில் எங்கள் அலுவலகத்தில் இருந்து கண்ணகிநகர் எவ்வளவு தூரம் என்றால் 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். கண்ணகிநகரில் எந்த ஏரியாவிற்கு போனோம் என்றால் எந்த இடத்திற்கு போனோம் என்று குறிப்பிட்டு சொல்ல இயலாது. சீவரம் குப்பைமேடு எவ்வளவு பரப்பளவு என்றால் ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு கிலோ மீட்டர் சுற்றியிருக்கும். சீவரம் குப்பைமேடு எங்கள் எல்லைக்கு வராது, பக்கத்து ஊராகும். சீவரம் குப்பைமேட்டிற்கு தனியாக வேறு கிராம நிர்வாக அலுவலரும், கிராம உதவியாளரும் உள்ளார்கள். சீவரம் குப்பை மேட்டில் சென்னை மாநகராட்சியில் இருந்து வரும் அனைத்து குப்பைகளையும் கொட்டுவார்கள் என்றால் சரிதான். என் முதல் விசாரணையில், கண்ணகிநகருக்கு நாங்கள் சென்றதாகவும், அப்பொழுது எதிரிகள் மூவரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எங்கள் முன்னிலையில் எதிரிகள் யாரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் வழக்கு பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கிற்கான மகசர்கள் எதுவும் தயார் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல, அங்கு தான் தயார் செய்தார்கள். நான் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை, ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த இடத்திலேயே போட்டேன். ஒப்புதல் வாக்குமூலங்கள், கைப்பற்றுதல் மகசர் காவல்

நிலையத்திலேயே வழக்கிற்கேற்றாற்போல˙ தயாரிக்கப்பட்டது என்றும், நான˙ காவல் நிலையத்திலேயே வைத்து கையெழுத்து போட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் முன்னிலையில் எந்த சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும், நான் போலீசார் கேட்டுகொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**4ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நாங்கள˙ கண்ணகிநகருக்கு செல்வதற்கு முன்னா˙ பொது மக்கள˙ எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 10 பேர் இருந்தார்கள். நாங்கள் அங்கு சென்றவுடன் போலீசார் எங்களிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் நாங்கள் கண்ணகிநகருக்கு சென்ற போது அங்கு இன்ஸ்பெக்டர் இருந்ததால், அங்கு சென்று கேட்டோம். நானும் கிராம நிர்வாக அதிகாரியும் கண்ணகிநகர் மைதானத்திற்கு செல்லவில்லை என்றும், எதிரிகளை விசாரித்த போது நாங்கள் அங்கில்லை என்றும், போலீசார் கேட்டுகொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

**SC.No.153/2007 and SC.No.132/2010 P.W.5-ராமலிங்கம் 14.02.2023**

**<u>3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் சம்பவ காலத்தில் எந்த ஊரில் கிராம உதவியாளராக பணியாற்றினேன் என்றால் ஒக்கியம் துரைப்பாக்கத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றினேன். சீவரம் குப்பைமேடானது எங்கள் நிர்வாக அதிகாரியின் கீழ் வரவில்லை என்றால் சரிதான். நானும், கிராம உதவியாளரும் சீவரம் குப்பைமேட்டிற்கு சென்ற போது அங்கு யாரும் கொட்டகைபோட்டு தங்கவில்லை என்றால் சரிதான். நானும் கிராம நிர்வாக அதிகாரியும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க துரைப்பாக்கம் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

**<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஒரு நபர் இறப்பதற்கு 3 மணி நேரத்திற்கு முன்பு உணவு அருந்தியிருந்தால் அந்த உணவு இறந்த நபரின் வயிற்றில் இருக்குமா என்றால் இருக்கும். எனது அறிக்கையில் இறந்த நபரான ஆனந்தின் வயிறு காலியாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளேனா அல்லது உணவு இருந்தததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இரைப்பையில் 50 கிராம் அளவிலான பகுதியாக செரிக்கப்பட்ட உணவு இருந்ததாக எனது அறிக்கை அ.சா.ஆ.10-ல் குறிப்பிட்டுள்ளேன். இறந்துபோன நபர் ஆல்க*ால் அல்லது விஷம் அருந்தியிருந்தால் விஷ்ரா ரிப்போர்ட்டில் அது குறித்து வந்திருக்கும் என்றால் வந்திருக்கும்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

**<u>SC.No.153/2007 ல் 1ம் எதிரி தரப்பு மற்றும் SC.No.132/2010ல் 2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னிடம் யார் புகார் கொடுத்தார் என்றால் முருகன் என்பவர் புகார் கொடுத்தார். எத்தனை மணிக்கு புகார் கொடுக்கப்பட்டது என்றால் காலை 6.00 மணிக்கு புகார் கொடுத்தார். சம்பவ இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இடைவெளி இருக்கும் என்றால் சுமார் 2 கிலோ மீட்டர் தூரமிருக்கும். அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை காவல் துறையினர்தான் எழுதினார்கள். என்னிடம் முருகன் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், புகார் வாக்குமூலம்தான் கொடுத்தார் என்றும் சொன்னால் சரிதான். முருகன் என்பவருக்கு படிப்பறிவு இல்லை என்றும், எழுத, படிக்க தெரியாது என்றும், அதனால் புகார் வாக்குமூலம் பெறுவதாக அ.சா.ஆ.1ல் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லவில்லை. எத்தனை மணிக்கு சம்பவ இடமான சீவரம்குப்பை மேட்டிற்கு சென்றோம் என்றால் காலை 7.25 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன். இறந்துபோன 3 நபர்களின் பிரேதங்களை எந்த இடத்தில், எப்பொழுது, எத்தனை மணிக்கு கைப்பற்றினேன் என்றால் 12.30 மணிக்கு மேல் 3 பிரேதங்களை கைப்பற்றினேன். 3 பிரேதங்களும் வெறும் தரையில் இருந்ததா என்றால் வெறும் தரையில்தான் இருந்தது. புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1ல் எங்கள் கொட்டகைக்கு அருகில் கொடுங்கையூரை சேர்ந்த பாபு தங்கியிருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சொல்லியுள்ளார். இறந்துபோன 3 நபர்களும் காயிலாங்கடை லைட் வெளிச்சத்தில் சாப்பிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சொல்லியுள்ளார். மேற்படி காயிலாங்கடைக்கும், சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் பக்கத்தில்தான் உள்ளது. அ.சா.ஆ.13 வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு பக்கத்தில் ஒரு குடிசை தவிர வேறு எந்த குடிசையும், லைட்டும் குறிப்பிடப்படவில்லை என்றால் இல்லை. சீவரம்குப்பை மேட்டிலிருந்து எடை போடுவதற்காக எடை மிஷினை மாநகராட்சி ஊழியர்தான்

நிர்வகித்து வந்தார் என்று சொல்லியுள்ளதில் மாநகராட்சி எடை மிஷின் ஊழியரை விசாரித்து வாக்குமூலம் பெற்றேனா என்றால் விசாரிக்கவில்லை. சீவரம் குப்பைமேடு அரசிற்கு சொந்தமான குப்பைமேடு என்றால் சரிதான். சீவரம் குப்பைமேடு சென்னை மாநகராட்சிக்கு கீழ் வருகிறது என்றால் சரியல்ல. பெருங்குடியை சேர்ந்தது. மேற்படி குப்பைமேட்டில் அரசு வாகனத்தை தவிர வேறு எந்த நபர்களும் அங்கு குப்பை கொட்ட அனுமதி இல்லை என்றால் சரிதான். அந்த சீவரம் குப்பைமேட்டிற்கு வாட்ச்மேன் இருப்பார்களா என்றால் எனக்கு தெரியாது. குப்பைமேட்டில் எத்தனை மணிக்கு குப்பை பொறுக்க வருவார்கள், எத்தனை மணிக்கு திரும்பி செல்வார்கள் என்று குப்பைமேட்டில் வேலை செய்பவர்களிடம் வாக்குமூலம் வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. சீவரம்குப்பை மேட்டில் குப்பை பொறுக்குவர்கள் மாலை 6.00 மணிக்கு மேல் அனுமதிக்கமாட்டார்கள் என்றும், அதன் பிறகு 6.00 மணிக்கு பிறகு மத்திய ரிசர்வ் போலீசார் பாதுகாப்பிற்கு வருவார்கள் என்றும் சொன்னால் அதுபோல் கிடையாது. மாநகராட்சி ஊழியர்கள் யாரையும் நான் விசாரித்து வாக்குமூலம் வாங்கியிருந்தால் மாலை 6.00 மணிக்கு மேல் குப்பை பொறுக்க அனுமதிக்க மாட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியவந்திருக்கும் என்றால் தவறாகும். அ.சா.2 பெருமாள் எனது விசாரணையின் போது சம்பவம் நடந்து 2.00 மணி நேரம் கழித்து பொறுமையாக வந்து பார்த்தாக எனது விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் அதுபோல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை. அ.சா.3 கட்டைய்யன் அவரது வாக்குமூலத்தில், 'ஒருத்தன் உருட்டு கட்டை, ஒருத்தன் ராடு மாதிரி சத்தி, மற்ற இரண்டு பேரும் வெட்ட வராங்க கத்தி அந்தோணி என்பவர் கல்லை தூக்கி ஆனந்தன் தலையில் போட்டார், வேலுவும், சரவணனும் சேர்ந்து குமாரை கத்தியால் வெட்டினார்கள், ரமேஷ் என்பவன் ஆண்டாளை வெட்டினான், நாங்கள் சத்தம் போட்டு ஓடினோம், அவங்களை வெட்டு, வெட்டு என்று சொல்லவே நாங்கள் பயந்து ஓடிவிட்டோம், 2.00 அல்லது 3.00 மணி நேரம் கழித்து வந்து பார்த்தோம், 3 பேரும் செத்து கிடந்தாங்க'

என்று கூறியதை எனது விசாரணையில் கூறியுள்ளார்களா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. இந்த வழக்கில் நான் எத்தனை கத்திகளை கைப்பற்றினேன் என்றால் இரண்டு கத்திகளை கைப்பற்றினேன். அ.சா.7 கிருஷ்ணசாமி எனது விசாரணையில், நான் சம்பவம் சம்பந்தமாக துரைப்பாக்கம் காவல் நிலையத்திற்கு போன் செய்து தகவல் சொன்னேன் என்று சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு எனது விசாரணையில் சொல்லவில்லை. அ.சா.7 கிருஷ்ணசாமிக்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது. அ.சா.7 கிருஷ்ணசாமி எனது விசாரணையில் அந்தோணிராஜ், வேலு, ரமேஷ் ஆகியோர்கள் பேசியதை கேட்டுத்தான் போலீசில் சொன்னேன் என்று சொல்லியுள்ளாரா என்றால் எனது விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை.

**(SC.No.153/2007 ல் 1ம் எதிரி தரப்பு மற்றும் SC.No.132/2010ல் 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

**SC.No.153/2007-ல் 1ம் எதிரி தரப்பு மற்றும் SC.No.132/2010ல் 2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

அ.சா.1 முருகன் கொடுத்த புகார் மனுவில் எனது அப்பா, அம்மா, தம்பி தங்கியிருந்த கொட்டகைக்கு பக்கத்தில் கொடுங்கையூரை சேர்ந்த பாபு என்பவரும் கொட்டகை போட்டு தங்கி குப்பை பொருக்கி வந்தான் என்று கூறியுள்ளாரா என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் மனுவில் அ.சா.1 முருகன் தன் அப்பா, அம்மா, தம்பி ஆகிய 3 பேரும் கொட்டகை பக்கத்தில் தார்ப்பாயில் தரையில் விரிந்து படுத்து தூங்கி விட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இறந்துபோன 3 நபர்களும் உட்கார்ந்து சாப்பிட்டார்கள் என்று புகார் மனுவில் கூறியுள்ளார் என்றால் காயலாங்கடை லைட் வெளிச்சத்தில் சாப்பிட்டார்கள் என்று கூறியுள்ளார். அ.சா.ஆ.13 மாதிரி வரைபடத்தில் காயலான் குடோன் இடத்திற்கு பக்கத்தில் பிரேதங்கள் உள்ள இடம் என்று குறியீடு செய்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.13 வரைபடத்தில் ஒரே குடிசை மட்டும் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த குடிசை யாருக்கு சொந்தமானது என்பதை மாதிரி வரைபடத்தில் காட்டவில்லை. அ.சா.ஆ.13 வரைபடத்தில காயிலாங்கடை அருகிலோ, குப்பை மேடு அருகிலோ மின்விளக்குகள் இருந்ததாகவோ, அவைகள் எரிந்ததாகவோ காட்டப்படவில்லை என்றால் சரிதான். வரைபடத்தில் நான் காட்டியுள்ள கேட்டிற்கு உட்பட்ட பகுதியில்தான் காயிலாங்கடை குடோன், கார்ப்ரேஷன் எடை மேடை, குப்பைமேடு ஆகியவை உள்ளன. நான் வரைபடத்தில் காட்டியுள்ள குப்பைமேடு சென்னை மாநகராட்சி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கேட்டில் 24 மணி நேரமும் வாயிற்காவலர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். 3 உடல்களும் மேற்படி பகுதியில் இருந்த நிலையில் மாநகராட்சி ஊழியர்களையோ அல்லது வாயிற்காவலர்களையோ விசாரித்து அங்கு உடல்கள் இருந்தது என்பதை காட்டி வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை. குப்பை பொருக்குவதற்கும், எடுப்பதற்கும் செல்வதற்கு வரைபடத்தில் காட்டியுள்ள கேட் மட்டுமே உள்ளது என்றும், அதை அந்த இடத்தை சுற்றி சுற்றுசுவர் உள்ளது என்பது பற்றியும் எனது புலன் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மாலை 6.00 மணிக்கு மேல் வேறு நபர்கள் யாரும் அங்கு குப்பை பொருக்க அனுமதி கிடையாது என்றால் அங்கு வாகனங்களை தவிர வேறு யாருக்கும்

அனுமதியில்லை. அ.சா.2 பெருமாள் தனது வாக்குமூலத்தில், "அப்பொழுது சுமார் 11.00 மணி ராத்திரிக்கு அந்தோணி, வேலு, சரவணன், ரமேஷ் ஆகிய 4 பேர்களும் ஓடி வந்து என் தங்கச்சி குடும்பத்தினரை நீங்கள் செத்து போனா தான் எங்கள் புழப்பு நடக்கும் என்று மாறி, மாறி வெட்டினார்கள்" என்று வாக்குமூலத்தில் கூறியுள்ளது, ஆனால் எந்த ஆயுதத்தால் மாறி, மாறி வெட்டினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. காயிலாங்கடை உரிமையாளர் யார் என்று அறிந்து அவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை. நான் எத்தனை சான்று பொருட்களை இந்த வழக்கில் கைப்பற்றினேன் என்றால் சவுக்கு கட்டை, பட்டா கத்தி, ரத்தக்கறை படிந்த மண், ரத்தக்கறை படிந்த கருங்கல், நீலக்கலர் பூப்போட்ட சேலை, கிளிபச்சை கலர் பாவாடை, ஆண்கள் அணியும் கருப்பு நிற சட்டை, நீலவெள்ளை கலர் கட்டம் போட்ட லுங்கி, ரோஸ் நிற ஜட்டி, மஞ்சள் நிற கட்டம் போட்ட சட்டை, கருப்பு நிற பேண்ட், கருப்பு நிற சட்டை வெள்ளை கோடு போட்டது, இரும்பு ராடு, மரக்கைப்பிடி போட்ட கத்தி ஆகியவற்றை கைப்பற்றினேன். பாண்டியன் நகர் இடுகாட்டில் இருந்து சீவரம் குப்பைமேட்டிற்கு செல்வதற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 3 கிலோ மீட்டர் இருக்கும். சாதாரணமாக 10, 15 நிமிடங்களில் வாகனத்தின் மூலம் செல்லலாம். வேலு என்ற சக்திவேல், சரவணன் ஆகியோர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற 2 மணி நேரம் கழித்து சீவரம் குப்பை மேட்டிற்கு சென்று கத்தியை கைப்பற்றினேன் என்றால் சரிதான். எதிரி அந்தோணி கொடுத்த அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகசரில் சவுக்கு உருட்டு கட்டை என்று எழுதி, அதனை சவுக்கு என்ற வார்த்தையை அடித்து 'தைலமர' என்ற வார்த்தை அதற்கு மேலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி அந்தோணிராஜின் வீட்டிலிருந்து ஒரு உருட்டு கட்டை மட்டும் கைப்பற்றினேன் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் கிருஷ்ணன், கிராம உதவியாளர்கள் முரளி மற்றும் ராமலிங்கம் ஆகியோர்கள் சம்பவம் நடந்த கிராம நிர்வாக அலுவலகத்திற்கு உட்பட்ட அலுவலர்கள் இல்லை என்றும், அவர்கள் துரைப்பாக்கம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர்கள் என்றும் சொன்னால் சரிதான். அ.சா.ஆ.22 மற்றும் அ.சா.ஆ.23 ஒப்புதல் வாக்குமூலங்களில் எதிரிகள் சரவணன் மற்றும் சக்தி என்ற சக்திவேல் ஆகியோர்களின் கையொப்பங்களை பெறவில்லை என்றால் சரிதான். எதிரிகள் மீது இதே சம்பவ நாளில் கத்தியை காட்டி மிரட்டியதாக ஒரு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால்

சரிதான். எதிரிகள் சாட்சிகள் கிருஷ்ணன், முரளி, ராமலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் நான் குறிப்பிடுவதை போல ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், அவர்கள் முன்னிலையில் சான்று பொருட்கள் கைப்பற்றவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து மேற்படி ஆவணங்களை உற்பத்தி செய்து கையெழுத்து பெற்றுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவ இடமானது அரசு கட்டுப்பாட்டில் உள்ள ஒரு இடம் என்றும், அந்த இடத்திற்கு அரசு அனுமதியின்றி செல்லமுடியாது என்றும், நான் குறிப்பிடுவதை போல சாட்சிகள் முருகன், பெருமாள், கட்டையன் ஆகியோர்கள் சம்பவ இடத்திற்கு இரவு நேரத்தில் சாப்பாடு கொண்டு செல்லவில்லை என்றும், நான் குறிப்பிடுவதை போல அவர்கள் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு 6.00 மணிக்கு மேல் யாரும் செல்லமுடியாது என்றும், அவ்வாறான நிலையில் மேற்படி சாட்சிகளை கண்ணுற்ற சாட்சிகளாக காட்ட வேண்டுமென்பதற்காக அவ்வாறு அவர்கள் சம்பவத்தை பார்த்ததாக சாட்சி பட்டியலில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று காலை 6.00 மணிக்கு அச்சு படிவ முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். அதே நாள் காலை 8.00 மணிக்கு அதாவது 2 மணி நேரம் கழித்து ஆலந்தூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் முதல் தகவல் அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 முருகன் என்னிடம் இரு வாக்குமூலங்கள் கொடுத்தார் என்றும், அதில் ஒரு வாக்குமூலத்தை மறைத்து விட்டேன் என்றும் மற்றொரு வாக்குமூலத்தை வைத்து வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. பார்வை மகசர், மாதிரி வரைபடம் ஆகியவை சம்பவம் நடந்த 2 நாட்களுக்கு பிறகு நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேன் என்றால் காவல் அடைப்பின் போதே அனுப்பிவிட்டேன். நான் குறிப்பிடும் நாள், நேரத்தில் எதிரிகளை கைது செய்து, ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கண்ட சான்று பொருட்கள் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 தன் முதல் விசாரணை சாட்சியத்தில், தானும் தனது மாமாவும் புகார் கொடுத்ததாகவும், தனக்கு எழுத, படிக்க தெரியும் என்றும், புகாரை தானே எழுதிக்

கொடுத்ததாகவும், முருகன் என்ற கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் கூறியுள்ள விவரம் சரிதான். சம்பவ இடத்திற்கு நான் செல்லும்போது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 10 நபர்கள் இருந்தார்கள். சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை 7.25-க்கு சென்றேன். அங்குள்ள பொது மக்களை விசாரித்து வாக்குமூலம் வாங்கினேனா என்றால் இல்லை. பிரேத விசாரணை அறிக்கையில் 7வது கலத்தில் ஆண்டாள் என்பவரின் பிரேதம் தலை கிழக்காகவும், கால்கள் மேற்காகவும் இருந்ததாக கூறியுள்ளேன். ஆனந்தன் என்பவரின் பிரேதம் தலை கிழக்காகவும், கால்கள் மேற்காகவும் இருந்ததாக கூறியுள்ளேன். குமார் என்பவரின் பிரேதம் தலை கிழக்காகவும், கால்கள் மேற்காகவும் இருந்ததாக கூறியுள்ளேன். பிரேத விசாரணை அறிக்கையில் 8வது கலத்தில் சவம் கண்டுபிடிக்கப்பட்ட சரியான இடத்தை குறிப்பிடும்போது சீவரம் கார்ப்ரேஷன் ரோடு, குப்பை மேடு பகுதி என்று கூறியுள்ளேன். குப்பை மேடு பகுதி என்பது பரந்துபட்ட பகுதி என்ற நிலையில் குறிப்பாக ஒரு இடத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மாதிரி வரைபடத்தில் பிரேதங்கள் உள்ள இடம் என்ற ஒரு இடத்தை காட்டியுள்ளேன், அந்த இடத்திலேயே 3 பிரேதங்களும் இருந்ததா என்றால் இருந்தது. மாதிரி வரைபடத்தில் 3 பிரேதங்களும் இருந்த இடத்தை தனித்தனியாக குறியிட்டு காட்டவில்லை. நான் தனம், பாபு, ஏழுமலை ஆகியோரையும் கண்ணுற்ற சாட்சிகள் என்ற முறையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அ.சா.1 புகார் மனுவிலோ, தன் வாக்குமூலத்திலோ சாட்சிகள் தனம், பாபு, ஏழுமலை ஆகியோர்கள் சம்பவத்தை பார்த்ததாக கூறியுள்ளார்களா என்றால் கூறவில்லை. 12.06.2006 அன்று எதிரி ரமேஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில், என்னை கூட்டிக் கொண்டு போனால் வழக்கு சொத்தை எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று குறிப்பாக சொல்லவில்லை. இந்த வழக்கில் தொடர்புடைய வெள்ளி மோதிரத்தை நான் கைப்பற்றவில்லை. சாட்சிகள் யாரும் வெள்ளி மோதிரத்தின் வடிவம், எடை ஆகியவைகள் பற்றி சொல்லவில்லை. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கார்ப்ரேஷன் எடை மேடையில் 24 மணி நேரமும் வேலைக்கு ஆட்கள் இருப்பார்கள் என்றால் இல்லை. அவ்வாறு எடை மேடையில் வேலை பார்த்தவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. பிரேதங்கள் இருந்த தார்ப்பாயை நான் கைப்பற்றினேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் இருந்த பிரேதங்களை நான் எத்தனை மணிக்கு அகற்றினேன் என்றால் மதியம் 12.30 மணிக்கு மேல் இருக்கும். நான்

குறிப்பிடும் நாள், நேரம் மற்றும் இடத்தில் வைத்து எந்த புகாரும் பெறவில்லை என்றும், அதன் அடிப்படையில் அச்சு முதல் தகவல் அறிக்கை பெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் குறிப்பிடும் 12.06.2003 அன்று 3வது எதிரி ரமேஷிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றும், அதன் அடிப்படையில் நான் எந்த சான்று பொருளும் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.7, அ.சா.ஆ.18, அ.சா.ஆ.19 ஆகியவைகள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கிருஷ்ணசாமி த/பெ.பெருமாள்சாமி என்பவர் என்னிடம் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், புகார்தாரருக்கும் இடையில் உள்ள தொழில் போட்டியின் காரணமாக புகார்தாரர் கொடுத்த புகாரை சரிவர புலன்விசாரணை செய்யாமல் வழக்கு பதிவு செய்து மேலதிகாரியின் ஆலோசனையின்பேரில் வழக்கு கோப்புகளை பின்னிட்டு தயார் செய்து குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் இடையில் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை